FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018

## Term Examination, March - 2018

| | | |
|---|---|---|
| juk; :- 12(2019) | k i dgngh Us pay; | Gss pj;j pl;l k; |

### வினாப்பத்திரம் 1 இன் குறிக்கோள்

இது பல்தேர்வு வினாக்கள் 25ஐக் கொண்டது. மனைப்பொருளியல் பாடத்துக்குரிய தேர்ச்சிகள் அடங்குமாறு இவ் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>வினா இல 1 – 6</u> வரை மனை முகாமைத்துவத்துக்குரிய பாடத்துறையில் 1, 2, 3, 4, 5 ஆகிய தேர்ச்சிகளுக்குரியது. இவை தொடர்பான அறிவு, விளக்கம், பயன்பாடு, பகுத்தாய்வுத் திறன்களை அளவீடு எதிர்பார்க்கப்படுகிறது.

<u>வினா இல 7 – 19</u> வரையான வினாக்கள் உணவும் போசணைக்குமுரியது. இவ்வினாக்கள் பரீட்சார்த்தியின் அறிவு, விளக்கம், பயன்பாடு, உயர் உளத்திறன் போன்றவற்றை அளவிடுமாறு தயாரிக்கப்பட்டதுடன், செய்முறைச் செயற்பாடுகளின் திறனும் மதிப்பிடப்பட்டுள்ளது.

<u>வினா இல 20 – 25</u> வினாக்கள் புடைவையும் உடை அமைத்தல் தொடர்பானது. (6 : 1, 6:2, 7:1, 7 : 2, 7 : 3 , 7 : 4, 7 : 5) தேர்ச்சிக்குரிய வினாக்கள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிவு, விளக்கம் செய்முறைத்திறன்களை அளவிடுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

agaram.lk

### வினாப்பத்திரம் II இன் குறிக்கோள்

<u>1ம் வினா</u> கட்டாயமானது. இங்கு மனையலங்காரம் மனை முகாமைத்துவம் போன்ற விடயப்பரப்பை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினா பரீட்சார்த்திகளிடமிருந்து விடய உள்ளடக்கத்திற்குரிய அறிவு விளக்கம், செய்முறை ஆக்கம் போன்ற திறன்கள் அளவிடப்படுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>2ம் வினா</u> மனை முகாமைத்துவத்துக்குரிய, கட்டட அமைவு தொடர்பானது. அறிவு, விளக்கம், தொகுப்பு, பகுப்பு போன்ற திறமைகளை அளவிடுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>3ம் வினா</u> ஆடைத்தொழில் நுட்பத் துறையின் புடைவை உற்பத்தி தொடர்பான அறிவு, விளக்கம், அவதானிப்பு தொடர்பான மதிப்பிடல் எதிர்பார்க்கப்படுகிறது.

<u>4ம் வினா</u> இவ்வினா போசணைப் பதார்த்தங்கள், உணவு தயாரிப்பு, போசணை நிலை போன்ற விடயங்கள் தொடர்பானது. பரீட்சார்த்திகளின் அறிவு, விளக்கம், பயன்பாடு, தொகுப்பு, பகுப்பு ஆகியவற்றின் திறன்களை அளவிடுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

## பகுதி I

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 6) 1 | 11) 4 | 16) 1 | 21) 1 |
| 2) 3 | 7) 1 | 12) 2 | 17) 2 | 22) 3 |
| 3) 4 | 8) 4 | 13) 5 | 18) 2 | 23) 5 |
| 4) 2 | 9) 2 | 14) 5 | 19) 5 | 24) 2 |
| 5) 1 | 10) 4 | 15) 5 | 20) 4 | 25) 2 |

(25x1=25புள்ளிகள்)

*01.*

1) நிறம் பொருத்தத்திற்கு ஏற்ப மனைக்கு நிறம் பூசுதல்.
   - ➢ மனைத்தளபாட ங்கள், உபகரணங்களை பொருத்தமானவாறு இடப்படுத்துதல்.
   - ➢ இடத்திற்குப் பொருத்தமானவாறு திரைச் சீலைகள் இடல்.
   - ➢ பல்வேறு துணையணிகள் பயன்படுத்தல்.

2) கதவு யன்னல்களைப் பயன்படுத்தல்.
   - ➢ கிறாதிகள்
   - ➢ வலைகள்
   - ➢ லட்டீஸ்
   - ➢ கண்ணாடி ஓடுகளைப் பொருத்துதல்.
   - ➢ காற்றிடை வெளிகள், ஒளி ஊடுபரவக் கூடிய பைபர் சீற்
   - ➢ கொங்கிறீட் கிறில், இரும்பு வலைகள்
   - ➢ கண்ணாடிக் கற்கள், கூரையில் பதிக்கக்கூடிய ஒளியோடுகள்
   - ➢ நிலா முற்றமும், தடாகமும்.

3) தமது மனை வளங்களை இனங்காணல்.
   குடும்ப அங்கத்தவர்களின் திறமைகள், ஈடுபாடுகள் பௌதீக வளங்கள்.
   - ➢ வளங்கள் வரையறுக்கப்பட்டவை என்பதை விளங்கிக் கொள்ளல்.
     வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தல்.
   - ➢ வளங்களை வினைத்திறனுள்ள முறையில் பயன்படுத்தல்.
   - ➢ மாற்று வழிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

4) சக்தி இழப்பு குறைவாக இருப்பதால் வெள்ளொளிர்வு மின் விளக்குகளுக்குப் பதிலாக LED மின் விளக்குகளைப் பயன்படுத்தல்.
   - ➢ மழைநீரைச் சேகரித்து உச்ச அளவில் பயன்படுத்தல்.
   - ➢ சமயலறை, குளியலறைகளில் பயன்படுத்தும் நீரை பூங்கா நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.
   - ➢ போக்குவரத்திற்கு செலவாகும் சக்தியை இழிவளவாக்கி பிரதேசத்தில் பரவலாகக் கிடைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துதல், கழிவுப் பொருட்கள் உற்பத்தியாவதைக் குறைதல்.

5) நிலத்தின் அளவு
   வடிவம், சாய்வு
   பல்வேறு நிறங்களைக் கொண்ட அழகிய தாவரங்களைத் தெரிதல்.
   தாவரங்களை பல வடிவங்களில் கத்தரித்தல். (5 x 5 =25புள்ளிகள்)

*02.*

1) கட்டடம் அமைந்துள்ள எல்லைக்கு அப்பால் உள்ள பிரதேசமாகும்.
2) கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தின் பல்வேறு இயல்புகள்
3) சூழல்
   - ➢ வடிவமைப்பு
   - ➢ கொள்ளளவு
   - ➢ தாவர வகைகள்
   - ➢ நிலத்தோற்றம்
4) யாதேனும் ஒரு சூழலில் காணப்படும் இயற்கையான தன்மைக்கு இசைவாக அமைக்கப்படும் நிலத்தோற்றம் இந்த வகையுள் அடங்கும்.

(4 x 3 =12புள்ளிகள்)

agaram.lk

03.

1) நார்களை வகைப்படுத்தல்

- இயற்கை நார்
  - தாவர நார் (செலுலோசு நார்)
    - பருத்தி
    - லினன்
    - சடைச்சணல்
    - ரெம்
    - ஹெம்ப
    - கபொக்
    - சிசல்சணல்
    - அன்னாசி
  - விலங்குநார் (புரதநார்)
    - பட்டு
    - கம்பளி
  - கனிய நார்
    - கன்னார்
    - கண்ணாடி
- மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட நார்.
  - மீள் பிறப்பித்த நார் (குறைத் தொகுப்புக்கள்)
    - இயற்கைப் பல்பகுதியம்
    - ரெயோன் (செலுலோசை அடிப்படையாக கொண்ட நார்)
  - செயற்கை நார்
    - பல்பகுதியம்
    - நைலோன் (பொலிமைட்)
    - பொலியெசுத்தர் - டெரலின்
    - பொலி அக்ரின் - ஓலோன்
    - பொலி எதிலீன்
    - பொலிபுரொப்பலின்
  - விஷேடமான நார்
    - ஸ்பன் டெக்ஸ்
    - தங்கம்
    - வெள்ளி
    - காபன்
    - அரமிட்டு

agaram.lk

2) நீளமான இழைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல்.

- ➢ செயற்கை உற்பத்தி செய்யப்பட்ட நீண்ட இழைகளை கட்டுக்களாக்குவதால் அல்லது சில இழைகளைச் சேர்த்து முறுக்குவதால் அல்லது முறுக்காமல் நாரை உற்பத்தி செய்து கொள்ளலாம்.
- ➢ குறுகிய நார்களைக் கொண்டு நூல் உற்பத்தி செய்தல்.

3) பருத்தி ⟶ பஞ்சு ⟶ (காய்தல்) விதை நீக்கம் ⟶ சீவுதல்
சுற்றுதல் ⟵ முறுக்குதல் ⟵ இழுத்தல்.

4) கம்பளித்துணியில் வெப்பத்தின் தாக்கம் துணியின் பலமிழந்து அழியும்.

- ➢ உயர் வெப்பம் பயன்படுத்தும் போது நாரில் நிறமாற்றம் ஏற்படும் பலமிழக்கும்.

சூரிய ஒளியின் தாக்கம்

- ➢ சூரிய ஒளி நேரடியாக துணியில் படும் போது துணி பலமிழக்கும். இதனால் சூரிய ஒளி படாத தட்டையான மேற்பரப்பில் வைத்து நிழலில் உலர்த்துதல் வேண்டும்.

(3 x 4 =12புள்ளிகள்)

04.

1) இலைசின்
2) காபோவைரேற்று
புரதம்
விற்றமின் B
கருவாட்டில் - இருமடங்கு புரதம் உண்டு.
கொழுப்பு – தேங்காயில் அடங்கியுள்ளது.

3) லோரிக் கமிலம்

4) வாய் - காபோவைதரேற்று மாப்பொருள் தயலின் மோல் டோசு
இரைப்பை - இரைப்பை பாகுநிலை அடையும் உணவு
முன்சிறுகுடல் - எஞ்சியுள்ள மாப்பொருள் அமைலேசு → மோல்டோசு
சிறுகுடல் - மோல்றோசு மோல்டேசு → குளுக்கோசு + குளுக்கோசு
- இலற்றோசு இலற்றேசு → குளுக்கோசு + கலற்றோசு
- சுக்குரோசு சுக்கிரோசு → குளுக்கோசு + பிரத்தோசு

(3 x 4 =12புள்ளிகள்)

05.

1) a – மிளகாய் - கப்செயினன்
b – மிளகு – பிபெரின்
c – இஞ்சி – ஜின்ஜரோல்

2) உணவின் தரப்பண்பு (Quality)
- உணவின் நிறம்
- உணவின் மணம்.
- உணவின் இழையமைப்பு
- உணவின் தரம் (Standard)
- உணவின் அளவு
- விலை

3) வரையறுத்த இடவசதி
- தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதிலுள்ள சிரமம்
- வெப்பம் கட்டுப்படுத்துவதிலுள்ள தடைகள்.
- உரிய முறையில் வளியோட்டம் நிகழாமை.

4) சமைத்தலின் போது நிறம், மணம், சுவை, மருத்துவகுணம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் தாவரப் பகுதிகள் சுவைச் சரக்குகள் எனப்படும்.

(3 x 4 =12புள்ளிகள்)

06.

1) சமிபாடு இலகுவாதல்
- இழைய அமைப்பு, நிறம் மேம்படல்.
- சுவையும் உண்டி விருப்பும் ஏற்படல்.
- நுண்ணுயிர்கள் அழியும்.
- உணவில் பல்வகைமை ஏற்படுத்தல்.

agaram.lk

2) மாப்பொருள் மற்றும் சீனி அடங்கிய உணவுகளை அதிக அளவில் உட்கொள்ளல்.
- செயற்கை சேர்மானங்கள் அடங்கி உணவுகளை அவசியமற்று உட்கொள்ளல்.
- கொழுப்பு உணவுகளை அதிகளவில் உட்கொள்ளல்.
- உணவு வேளைகளில் நார்த்தன்மையுள்ள மரக்கறிகள் பழவகைககள் குறைந்த அளவில் உட்கொள்ளல்.
- உடன் உணவுகளின் நுகர்வு அதிகரித்தல்.
- அமில உணவுகளை அதிகளவு உட்கொள்ளல்.
- கொண்டு செல்லும் உணவுகள் (Take away) (சிற்றுண்டிகளின் நுகர்வு)

3) உரிய விதத்தில் மூலப்பொருள் பயன்படுத்துதல்.
பயன்படுத்தும் மூலப்பொருட்களின் தரப்பண்பு
கலக்கும் சரியான நுட்பமுறைகள்

4) மஞ்சட்சோறு, புறியாணி, காய்கறிச் சோறு, நெய்ச்சோறு, நாசிக் கொரேன்

(3 x 4 =12புள்ளிகள்)

07.

1) பெருமளவு தொழில் வாய்ப்புக்கள் உருவாகல்
உயர் கல்வி வாய்ப்புக்கள்
தேசிய புடைவை உற்பத்தியின் வளர்ச்சிக்கு உயர் கல்வி வாய்ப்புக்கள் பெரிதும் துணையாக அமைதல்.
மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்புச் செய்தல்.
நாட்டிற்கு அந்நிய செலவாணி வருமானம் கிடைத்தல்.

2) நவநாகரிகப் பாணியை நிருமாணித்தல்
- முன்னரான திட்டமிடல்
- மாதிரியுருவை அமைத்தல்
- துணியின் தரத்தைப் பரிசீலித்தல்
- துணியை வெட்டுதல்.
- தைத்தல்.
- தைக்கப்பட்ட ஆடையின் தரத்தை பரிசீலித்தல்
- முடிப்பு
- பொதியிடல்

3) பல்வேறு வடிவங்கள், நிறங்கள் ஆகியவற்றைக் கொண்ட துணி வகைகள் மற்றும் வேறு அமைப்புக்கள் போன்றவற்றை பயன்படுத்தி அணிவதிலுள்ள சொகுசு, அழகு போன்றன தொடர்பாக கவனம் செலுத்தி ஆடைகளை நிருமாணித்தலே நவநாகரிகப் பாணி நிர்மாணித்தல் எனப்படும்.

4) துணியின் நெசவு.
1 சதுர அங்குலத்திற்கு பயன்படுத்தப்பட்ட நூல்களின் எண்ணிக்கை அளவு.
நிறை
துணியின் தன்மை
இழையமைப்பு
நிறம்
சலவை
சூரிய ஒளி மற்றும் வியர்வைக்கு ஈடுகொடுக்கும் தன்மை.

agaram.lk